## அரியலூர் மாவட்ட வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் வருமானம் தரும் கருங்கோழி வளர்ப்பில் வெற்றிக்கண்ட பெண்மணி

**அ.ராஜ்கலா, தொழில்நுட்பவல்லுநர், (வேளாண் விரிவாக்கம்)**
முனைவர் கோ.அழகுகண்ணன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
கிரீடு வேளாண் அறிவியல் மையம், சோழமாதேவி, அரியலூர் மாவட்டம்
அலைபேசி: 9655926547



அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் சோழமாதேவி கிராமத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் மையம் 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக நிதி உதவியுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த மையமானது கிரீடு தொண்டு நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தின் முக்கிய செயல்பாடுகளாக பயிற்சிகள், முதல் நிலை செயல்விளக்கம், வயல்வெளி பரிசோதனை, விதை உற்பத்தி மற்றும் விரிவாக்க பணிகளை அரியலூர் மாவட்ட விவசாய பெருமக்களுக்கு செய்து வருகின்றது.

ஒவ்வொரு மாதமும் கட்டண பயிற்சியாக ஆடுவளர்ப்பு, கறவை மாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகிய பயிற்சிகளை மையத்தின் மூலம் நடத்தப்பட்டது. இப்பயிற்சிகளில் ஒன்றான நாட்டு கோழி வளர்ப்பில் அதாவது 24.02.16 அன்று நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்டு வெற்றிப்பெற்ற பெண்மணிதான் திருமதி.S.மீனா.

திருமதி.S.மீனா அவர்களிடம் நாட்டுக்கோழி வளர்ப்பில் சிறந்து விளங்குவதை பற்றி கேட்டபோது, அவர் கூறுகையில், எனது பெயர் மீனா, வயது 25, நான் செவிலியல் படிப்பு படித்துள்ளேன். நான் கோழிவளர்ப்பில் ஈடுபடுவதற்கு முன்பு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வந்தேன். அப்போது எனது மாத வருமானம் ரூ.2000/- ஆகும். ஆனால் எனக்கு திருமணம் ஆன பிறகு என்னால் செவிலியர் தொழிலில் இரவு மணி இருந்தது. அதனால் என்னால் குடும்பத்தினை கவனிக்க போதுமான நேரம் இல்லாததால் நான் செவிலியர் பணியிலிருந்து வெளிவந்து விட்டேன்.



வேலையை விட்ட இரண்டு மாதம் வீட்டில் இருந்தேன். அப்போதெல்லாம் ஏதேனும் வீட்டிலிருந்தவாறு தொழில் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். அப்போதுதான் வேளாண் அறிவியல் மையம் பற்றி எனது ஊரில் உள்ள எனது நண்பர் ஒருவர் கூறினார். மையத்திற்கு சென்று ஆலோசித்தால் நமக்கு ஏற்றவாறு ஏதேனும் தொழிலினை தேர்வு செய்து அதற்கான பயிற்சியும் வழங்கப்படும் என்று எனது நண்பர் கூறிய அறிவுரைப்படி வேளாண் அறிவியல் மையத்தில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்களிடம் ஆலோசனை கேட்டபோது, நீங்கள் படித்த பெண்மணியாக இருப்பதால் நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபாடு செலுத்துங்கள் என்றும் மேலும் அதற்கான பயிற்சி நடைபெறும் தேதியையும் கூறினார்.

நானும் 24.02.2016 அன்று மையத்தில் நடைபெற்ற நாட்டுக்கோழி வளர்ப்பில் பயிற்சியில் கலந்துக்கொண்டேன். அப்பயிற்சியில் நாட்டுக்கோழி இரகங்கள், கொட்டகை

அமைப்பு, வளர்ப்பு முறை, தீவன முறை, நோய் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதல் வரை விரிவாக கற்றுக்கொண்டேன். பயிற்சிக்கு பிறகு தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆலோசனையுடன் கடக்நாத் என்னும் கருங்கோழி வளர்ப்பில் ஈடுபட்டேன். முதலில் 20 கடக்நாத் தாய் கோழிகளை கொண்டு தொழிலினை ஆரம்பித்தேன். தொடர்ந்து மையத் தொழில்நுட்ப வல்லுநர்கள் தீவனம் அளிக்கும் முறை மற்றும் இயற்கை முறையில் நோய் மேலாண்மை பற்றி ஆலோசனை வழங்கினார். இதனை தொடர்ந்து முட்டை பொரிப்பான் கொண்டு கோழி குஞ்சுகளை உற்பத்தி செய்து என்னைப்போன்ற மகளிருக்கு வழங்கி வருகிறேன். இதுவரை 25 பெண்களுக்கு கருங்கோழி குஞ்சுகளை வழங்கி தொழில்முனைவோராக மாற்றியுள்ளேன்.



பிறகு நான் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் துவங்கப்பட்ட இளைஞர்கள் குழுவில் சேர்ந்து மாதம் மாதம் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டு எனது சந்தைபடுத்துதலை அதிகப்படுத்தினேன் முட்டையாகவும், கோழிகுஞ்சு ஆகவும். கோழி முட்டை ஒன்று ரூ.30க்கும், ஒரு நாள் கோழி குஞ்சு ரூ.70 எனவும், பெரிய கோழி ஒன்று ரூ.800க்கும் விற்பனை செய்து வருகிறேன். இவ்வாறு தொழில் செய்ததன் மூலம் தற்போது தாய்கோழி 100 மற்றும் சேவல் 10ம் உள்ளது. இவற்றினை வைத்து தற்போது முட்டை மற்றும் கோழி விற்பனை மூலம் மாதம் வருமானமாக ரூ.45,000 பெற்று வருகிறேன்.

தற்போது வேளாண் அறிவியல் மையத்தின் இளைஞர்கள் குழு மூலம் ரூ.50,000 கடன் பெற்று கருங்கோழி வளர்ப்பு தொழிலினை மேம்படுத்தியதோடு, காளான் வளர்ப்பு தொழிலினை ஆரம்பித்துள்ளேன். காளான் வளர்ப்பில் நாள் ஒன்றுக்கு 2 கிலோ பெற்று ரூ.400 பெற்று வருகிறேன். அதோடு மட்டுமல்லாமல் 2 பெண்களுக்கு வேலைவாய்ப்பினை கொடுத்து உள்ளேன் என்று கூறியதோடு என்னை ஆளாக்கிய வேளாண் அறிவியல் மையத்திற்கு நன்றி கூறினார்.



திருமதி.மீனா அவர்கள் தற்போது மையத்தில் நடைபெறும் நாட்டுக்கோழி வளர்ப்பில் பயிற்றுநராக செயல்பட்டு வருகிறார். மேலும் கருங்கோழி வளர்ப்பு மற்றம் சந்தைப்படுத்துதலை அகில இந்திய வானொலி, காரைக்கால் மூலம் விவசாய பெருமக்களுக்கு தெரிவித்து உள்ளார். இதன் மூலம் இதுவரை 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் திருமதி.மீனாவை அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கோழிகுஞ்சுகளை பெற்று தொழிலினை ஆரம்பித்து உள்ளனர்.

மேலும் திருமதி.மீனா அவர்களின் கருங்கோழி பண்ணையினை அரியலூர் மாவட்டம் நபார்டு வங்கி மேலாளர் அவர்கள் மற்றும் வேளாண் இணை இயக்குநர் ஆகியோர் பார்வையிட்டு மீனாவை பாராட்டி சென்றனர்.

வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் நடத்தப்பட்ட பண்ணை மகளிர் தினத்தன்று திருமதி.மீனா அவர்களுக்கு சிறந்த தொழில்முனைவோர் என்ற விருது நபார்டு வங்கி மேலாளர் திரு.நவீன்குமார் மூலம் வழங்கப்பட்டது. எனவே மகளிர் அனைவரும் மீனாவை போன்று வீட்டிலிருந்தே தொழில் செய்து தொழில் முனைவோராகி வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

************